1971 டிசம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கார்ப்பரேஷனோ அல்லது நகராட்சி, பேரூராட்சிகளோ, எல்.ஐ.சி. யிடம் இருந்து நேரிடையாகக் கடன் பெறுவதற்குத் தடையில்லை. ஆனால் கடன் பெறுகிற நேரத்தில் சர்க்கார் காரண்டி தேவை. அப்படிச் சர்க்கார் காரண்டி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது.

Water-supply schemes

* 446. *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the national water-supply scheme is still in force in Tamil Nadu; and

(*b*) if so, whether any scheme is pending in Tiruttani taluk of Chingleput district?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) தேசிய நீர் வழங்கும் திட்டம் இப்போது செயல்படவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து பொதுச் சுகாதாரப் பொறியல்—நகராட்சிப் பணிகள் துறையால் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்றுத் திட்டப் பணிகள் 1968 69-ம் ஆண்டு வரை தேசீய குடிநீர் வழங்கு—துப்புரவுத் திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்பட்டு வந்தன. தேசிய குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட திட்டப் பணிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(இ) திருத்தணி வட்டத்தில் தேசீய குடிநீர் வழங்கு துப்புரவுத் திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்பட்டுள்ள ஒரே திட்டம் திருத்தணி ஊராட்சி குடிநீர் வழங்கு திட்டமாகும். சிறு வேலையினங்களைத் தவிர இத் திட்டப்பணி அநேகமாக முடிந்துவிட்டது. இருந்தபோதிலும், முறையான குடிநீர் வழங்கு திட்டம் திருத்தணி ஊராட்சியில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணி வட்டத்தில் பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டம் அமுலாக்கப்படவில்லையே. அதற்கேதேனும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புகு டாக்டர் மு. கருணாநிதி : இது முடிந்த பிறகு அவற்றைப்பற்றி எல்லாம் யோசிக்கலாம்.

திரு. என். மருதாசலம் : கோவையில் சிறுவாணி குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெகு விரைவில் கோவை முதல் அமைச்சரை நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்று சந்திக்கிற அளவில் உள்ளது.

* 447. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Chief Minister be pleased to state the details of the protected water-supply scheme for Kanyakumari district at present?